# வேதாரண்யம் நகராட்சி

நாகப்பட்டினம் மாவட்டம்

# நிர்வாக அறிக்கை

# 2019-2020

# வேதாரண்யம் நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2019-2020

# அமைப்பும் நிர்வாகமும்

வேதாரண்யம் நகராட்சி அரசாணை எண்.301 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (தேர்தல்) நாள்.00 24.08.2004-ன்படி தேர்வுநிலை பேரூராட்சியில் இருந்து தரம் உயர்த்தப்பட்டு 24.08.2004-ம் தேதியிலிருந்து 3–ம் நிலை நகராட்சியாகவும் அரசாணை ஆணை எண்.154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை 09.08.2010ன்படி இரண்டாம்நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி வேதாரண்யம், தோப்புத்துறை ஆகிய இரு பகுதிகளை உள்ளடக்கியது.

**2001ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை : 34262**

| | | |
|---|---|---|
| அ) நகரப்பரப்பளவு | : | **36.26 ச.கி.மீ.** |
| ஆ 2011 – ன்படி மக்கள் தொகை | : | **34262** |
| இ) நகர்மன்ற உறுப்பினர் எண்ணிக்கை | : | **21** |
| ஈ) நகராட்சியின் நிலை | : | இரண்டாம்நிலை |

**மன்றம்:**

அரசு ஆணை எண்.135 மற்றும் 136-ன்படி நகராட்சி பகுதி 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 15.10.2006-ல் நகர்மன்ற தேர்தல் நடத்தப்பட்டது. அக்டோபர் 2016ல் உள்ளாட்சி மன்ற காலம் முடிவுற்றதும் உள்ளாட்சி மன்ற தேர்தல் நடைபெறாத நிலையில் அரசாணை எண்.30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 24.10.2016 – ன்படி ஆணையர் தனி அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக அரசால் நிர்ணயிக்கப்பட்ட மறுவரையறை ஆணைய D.C.order No.1/2017/TNDC/EG-1/ நாள்: 12.09.17-ன் படி உள்ளாட்சிகளின் தற்போதைய வார்டுகளை மறுவரையறை செய்திட தெரிவிக்கப்பட்டதின் பேரில் ஏற்கனவே உள்ள இந்நகராட்சியின் 21 வார்டுகளும் கீழ்குறிப்பிட்டவாறு மறுவரையறை செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | பெண்கள் பொது (Women General) | 1, 2, 3, 4, 7, 8, 12, 14, 21 (மொத்தம் 9 வார்டுகள்) |
| 2. | பெண்கள் ஆ.தி (women S.C) | 5, 9 (மொத்தம் 2 வார்டுகள்) |
| 3. | ஆ.தி. பொது (S.C. General) | 11 (ஒரு வார்டு) |
| 4. | பொது (General) | 6, 10, 13, 15, 16, 17, 18,19, 20 (மொத்தம் 9 வார்டுகள்) |

மறுவரையறை செய்யப்பட்ட வார்டுகள் இறுதி செய்து மறுவரையறை ஆணைய பரிந்துரையின்படி 14.12.2018 தேதிய மாநில அரசிதழ் எண்.407 ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

**எல்லை:**

இந்நகராட்சி கீழ்க்காணும் வருவாய் கிராமங்களை உள்ளடக்கி 36.26 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை கொண்டது.

| வ.எ. | வருவாய் கிராம எண் | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | 58 | வேதாரண்யம் பட்டினம் |
| 2. | 56 | இனாம் வடகட்டளை |
| 3. | 59 | அகஸ்தியன்பள்ளி |
| 4. | 54 | தோப்புத்துறை |
| 5. | 55 | மகாராஜபுரம் கீழ்பாதி |

**அருகிலுள்ளநான்கெல்லைக்கிராமங்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | தேத்தாக்குடி கிராமம் | (வடக்கு) |
| 2. | வங்காளவிரிகுடா | (கிழக்கு) |
| 3. | அண்டர்காடு கிராமம் | (மேற்கு) |
| 4. | கோடியக்காடு கிராமம் | (தெற்கு) |

நடப்பு அறிக்கையாண்டில் புதிதாக எல்லைகள் எதுவும் சேர்க்கப்படவில்லை.

**ஆணையர்:**

இந்நகராட்சியின் ஆணையராக **05.05.2017** முதல் திரு என்.ஆர். ரவிச்சந்திரன் அவர்கள் **31.12.2019** வரை பணிபுரிந்துள்ளார். **31.12.2019** அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றார். **01.01.2020** முதல் திரு ப. பிரதான்பாபு, நகராட்சிப்பொறியாளர் அவர்கள் ஆணையராக கூடுதல் பொறுப்பேற்று அறிக்கை ஆண்டில் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார்.

**நகராட்சி பொறியாளர்:**

அ.ஆ.எண்.30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.02.2013ல் நகராட்சி பொறியாளர் நிலை-3 தோற்றுவிக்கப்பட்டது. திரு. கே. முகம்மது இப்ராஹிம் அவர்கள் 29.02.2016 பி.ப முதல் 31.10.2019 முடிய நகராட்சிப்பொறியாளராக பணிபுரிந்துள்ளார். அவர் துவாக்குடி நகராட்சிக்கு பணிமாறுதல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து 01.11.2019 முதல் திரு ப. பிரதான்பாபு M.E., அவர்கள் நகராட்சிப்பொறியாளராக அறிக்கை ஆண்டில் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார்.

**நகராட்சி தேர்தல்:**

உள்ளாட்சி தேர்தல் நடைபெறாத நிலையில் அ.ஆ.எண்.30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 24.10.2016 –ன்படி நகராட்சி ஆணையரையே தனிஅலுவலராக நியமிக்கப்பட்டதால் ஆணையர் அவர்கள் **தனிஅலுவலராக** பொறுப்பேற்று அக்டோபர் 2016 முதல் தனி அலுவலர் பணிபுரிந்து வருகிறார்.

## 4. மன்றம்

அறிக்கையாண்டில் மன்றக்கூட்டங்களும், நியமனக்குழு கூட்டங்களும் நகர்மன்றத்தால் விதிகளின்படி நடத்தப்பட்டுள்ளது.

| வ.எ. | கூட்ட விபரம் | மொத்த கூட்டங்கள் எண்ணிக்கை | மொத்த பொருட்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சாதாரணக்கூட்டம் | 11 | 129 |
| 2. | அவசரக்கூட்டம் | 6 | 43 |
| 3. | சிறப்புக்கூட்டம் | -- | --- |
| | கூடுதல் | 17 | 172 |

மேற்கண்டுள்ளவாறு மன்ற கூட்டங்களில் அறிக்கையாண்டில் 172 எண்ணிக்கை பொருட்கள் முடிவு செய்யப்பட்டன. ஒத்தி வைக்கப்பட்ட பொருள்கள் இல்லை.

அறிக்கையாண்டில் நியமனக்குழு கூட்டங்கள் 3 நடைபெற்றது. வரிமேல் முறையீட்டுக்குழு ஒப்பந்தக்குழு கூட்டங்கள் ஏதும் நடைபெறவில்லை.

| வ.எ. | குழுவின் பெயர் | கூட்டங்கள் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | நியமனக்குழு கூட்டம் | 3 | 3 |
| 2. | ஒப்பந்தக்குழு கூட்டம் | இல்லை | - |
| 3. | வரிவிதிப்பு மற்றும் மேல் முறையீட்டுக் குழு | இல்லை | - |

__நிர்வாகம் - பொதுப்பிரிவு__

நிர்வாகப் பிரிவில் 31.03.2020 முடிய அறிக்கையாண்டில் பணியாற்றிய அலுவலர்கள் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எ. | பணியிட விபரம் | பணியில் உள்ளவர் எண்ணிக்கை | காலியிடம் |
|---|---|---|---|
| 1 | மேலாளர் | 1 | - |
| 2 | உதவியாளர் | 1 | - |
| 3 | இளநிலை உதவியாளர் | 3 | - |
| 4 | அலுவலக உதவியாளர் | 1 | - |
| 5 | இரவுக்காவலர் | 1 | - |
| 6 | பதிவறை எழுத்தர் | 1 | - |
| 7 | புள்ளி விவர குறிப்பாளர் | - | 1 |

## வருவாய் பிரிவு:

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணியாற்றியுள்ளார்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வருவாய் ஆய்வர் (அ.ஆ.எண்.30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.13.02.2013ல் தோற்றுவிக்கப்பட்டது) | 1 | காலியிடம் |
| 2. | வருவாய் உதவியாளர் | 2 | 1 |

அறிக்கையாண்டில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியற்ற இனங்கள் அனைத்தும் 100% வசூல் செய்யப்பட்டுள்ளது.

### சொத்து வரி கேட்பு வசூல் நிலுவை விபரம் (2019-20)

| விபரம் | நடப்பு | நிலுவை | மொத்தம் |
|---|---|---|---|
| கேட்பு | **61.21** | **13.46** | **74.68** |
| வசூல் | **60.49** | **11.24** | **71.74** |
| நிலுவை | **0.72** | **2.22** | **2.94** |
| வழக்கில் உள்ளவை | - | - | - |

## நகரமைப்பு பிரிவு

Ï<sup></sup>efuh£Á¡F efuik¥ò MŒths® gâæl« m.M.எண்.30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.02.2013-ல் தோ‰Wé¡f¥பட்டது. அறிக்கையாண்டில் திருமதி எம். மரகதம் என்பவர் 29.01.2018 முதல் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

## கட்டிட அனுமதி 1.4.2019 முதல் 31.3.2020 முடிய

| | | |
|---|---|---|
| I. | அனுமதி வழஙகப்பட்ட மனைப்பிரிவுகள் எண்ணிக்கை | **3** |
| II. | <u>கட்டிட அனுமதி</u> | |
| அ) | அறிக்கை ஆண்டு துவக்கத்தில் நிலுவையிலிருந்த மனுக்கள் | – |
| ஆ) | அறிக்கை ஆண்டில் வரப்பெற்ற மொத்த மனுக்கள் | 66 |
| | கூடுதல் | **66** |
| | அனுமதி வழஙகப்பட்டவை | 32 |
| | நிராகரிக்கப்பட்டவை | 34 |

| | 31.03.2020–ல் நிலுவை | – |
|---|---|---|

## 8. வழக்குகள்

இந்நகராட்சி தொடர்பான வழக்குகளில் நகராட்சி சார்பாக திரு.ஆர். கிரிதரன், பி.ஏ.பிஎல்., உள்ளூர் நீதிமன்ற வழக்குகளுக்கும், திரு. A.N. தம்பிதுரை, அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதி மன்ற வழக்குகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அறிக்கை ஆண்டில் வழக்குகள் ஏதும் இல்லை.

| வ.எண் | நீதிமன்றம் | நிலுவை வழக்குகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | அறிக்கை ஆண்டு துவக்கத்தில் | அறிக்கை ஆண்டில் வரப்பெற்றது | அறிக்கை ஆண்டில் முடிவு பெற்றது | நிலுவை |
| 1. | சென்னை உயர்நீதிமன்றம் | – | – | – | – |
| 2. | உள்ளூர் நீதிமன்றம் | – | – | – | – |

## பொறியியல் பிரிவு:

## 7. அறிக்கையாண்டில் பொறியியல் பிரிவில் பணியாற்றிய அலுவலர்கள்

அ.ஆ.எண்.30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.13.02.2013ல் இந்நகராட்சிக்கு நகராட்சி பொறியாளர் (நிலை-3) மற்றும் ஒரு பணி ஆய்வர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

| வ.எ. | பணியிட விபரம் | பணியில் உள்ளவர்கள் எண்ணிக்கை | காலியிடம் |
|---|---|---|---|
| 1 | நகராட்சி பொறியாளர் | 1 | - |
| 2 | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 1 | - |
| 3 | பணி ஆய்வர் | 1 | - |
| 4 | மின் கம்பியாளர் (தெருவிளக்கு பராமரிப்பு) | 2 | - |
| 5 | பம்பு மெக்கானிக் (குடிநீர் பராமரிப்பு) | 1 | 1 |
| 6 | ஓட்டுநர் (ஈப்பு) | 1 | - |

## சாலைகள் பராமரிப்பு

| | (ரூ.இலட்சத்தில்) |
|---|---|
| அறிக்கை ஆண்டில் சாலைகள் பராமரிப்பிற்கான செலவு (2019-20) | 72092338 |
| சென்ற ஆண்டில் செய்யப்பட்ட செலவு (2018-19) | 37289833 |

## நகராட்சியால் பராமரிக்கப்படும் சாலைகள் விபரம்

| வ.எ. | விபரம் | 2018–19 ல் உள்ள சாலைகள் கி.மீ. | 2019–20 ல் உள்ள சாலைகள் கி.மீ. |
|---|---|---|---|
| 01 | தார் சாலை | 77.518 | 78. 898 |
| 02 | கருங்கல் சாலை | 2.200 | 2.200 |
| 03 | செம்மண் சாலை | - | - |
| 04 | மண் சாலை | 12.700 | 11.32 |
| 05 | சிமெண்ட் சாலை | 11.082 | 11.082 |
| | கூடுதல் | **103.500** | **103.50** |

## தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2019-20

| வ.எ. | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | 11 எண்ணிக்கையிலான தார்சாலைப்பணிகள் மேம்பாடு செய்யும் பணி | 500.00 |

## பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2019-20

| வ.எ. | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | நகராட்சி பகுதியில் 4 இடங்களில் உயர்கோபுர மின்விளக்கு அமைக்கும் பணி | 15.20 |

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2019-20

| வ.எ. | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | சன்னதி கடற்கரையில் பொழுதுபோக்கு பூங்கா அமைக்கும் பணி | 50.00 |
| 2. | நாகை சாலையில் டாக்ஸி ஸ்டாண்ட் அமைக்கும்பணி | 30.00 |
| 3. | சின்னசாலை - நாகைசாலை இணைப்பு சாலை (சின்னசாலை) தார்சாலையாக மேம்பாடு செய்யும்பணி | 12.00 |

## 14-வது நிதிக்குழு மானியத்திட்டம் 2019-20

| வ.எ. | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | நகராட்சிப்பகுதியில் உள்ள 17 எண்ணிக்கை தார்சாலைகளை மேம்பாடு செய்யும் பணி | 170.00 |

## குடிநீர் விநியோகம்:

## தண்ணீர் வசதி

இந்நகராட்சியில் கூட்டுக்குடிநீர் திட்ட செயல்பாட்டில் 15.00 லட்சம் கொள்ளளவு உள்ள ஒரு குடிநீர் விநியோகத்தொட்டியும், 1.00 லட்சம் கொள்ளளவு உள்ள ஒரு குடிநீர் விநியோகத்தொட்டியும், 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கைலவனம்பேட்டையிலும், 0.60 லட்சம் கொள்ளளவு உள்ள ஒரு குடிநீர் விநியோகத்தொட்டியும், உள்ளூர் நீர் ஆதாரம் மூலமாக நகராட்சிக்கு சொந்தமான 7 (25,000 Lr) மேல்நிலைத்தொட்டியும், தானியங்கி மின் மோட்டார் 1, 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 24 சிறிய மினி பவர் டேங்க் மற்றும் 534 கைப்பம்புகள் மூலம் குடிநீர் தினந்தோறும் 2 மணிநேரம் வீதம் 50.00 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. நபர் ஒருவருக்கு நாள்தோறும் 88 LPCD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| பொது குழாய்கள் | : | **267** |
| வீட்டுக்குழாய் இணைப்புகள் | : | **3071** |
| உள்ளூர் நீர் ஆதார பொதுகுழாய்கள் | : | **195** |

கொள்ளிடம் கூட்டு குடிநீர் மூலம் தண்ணீர் பெற்றது 6,11,524 கி.லிட்டர் தண்ணீர் கட்டணம் ரூ. 57.79 லட்சம் செலவிடப்பட்டது.

## வேதாரண்யம் கூட்டு குடிநீர் திட்டம்:

வேதாரண்யம் நகராட்சி **36.26** சதுர கி.மீ. பரப்பளவு கொண்டதாகும். **2011-ம்** ஆண்டின் மக்கள் தொகை கணக்கீட்டின்படி மக்கள் தொகை **34262** ஆகும். கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தில் வேதாரண்யம் நகராட்சி பகுதிக்கு ரூ.**16.87** கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வேதாரண்யம் நகரிலிருந்து **26** கி.மீ. தொலைவில் வண்டுவாஞ்சேரி கிராமத்தில் துணை நீருந்து நிலையம் அமைந்துள்ளது. அங்கிருந்து **93** கி.மீ. தொலைவில் திருவைகாவூரில் கொள்ளிடம் ஆற்றங்கரையில் தலைமை நீரேற்றும் நிலையம் உள்ளது. வண்டுவாஞ்சேரியிலிருந்து **45** குதிரை திறன் மின் மோட்டர் இரண்டு பொருத்தப்பட்டு 450mm PSC குழாய்கள் மூலமாக வேதாரண்யம் காந்தி பூங்காவினில் **15,00,000** லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கும், **1,00,000** லிட்டர் கொள்ளளவுள்ள அகஸ்தியன்பள்ளி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கும் **60,000** லிட்டர் கொள்ளளவுள்ள சர்வகட்டளை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கும் நீரேற்றம் செய்யப்படுகிறது. பகிர்மான குழாய் **103** கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

**3071** எண்ணிக்கையிலான வீட்டு குடிநீர் இணைப்புகள் மூலமாகவும், **267** கூட்டுகுடிநீர் பொது குடிநீர் குழாய்கள் மூலமாகவும், தினசரி ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு **82** லிட்டர் குடிநீர் தினசரி காலையில் சுமார் **2** மணி நேரம் விநியோகிக்கப்படுகிறது. மேலும் **456** எண்ணிக்கையிலான கைபம்புகளும், **1000** லிட்டர் கொள்ளளவு கொண்ட **41** மினிபவர் தொட்டியும், உள்ளூர் நீர் ஆதாரம் மூலம் **25,000** லிட்டர் கொள்ளளவு கொண்ட 7 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியும், **30,000** லிட்டர் கொள்ளளவு கொண்ட **2** மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியும், தானியங்கி மின் மோட்டார் ஒன்றின் மூலம் **195** உள்ளூர் நீர்ஆதார பொதுகுழாய் மூலமாகவும் குடிநீர் வழங்கப்பட்டு நல்லநிலையில் பராமரிக்கப்படுகிறது.

## பொது சுகாதாரம்

| **வ.எ.** | **பொது சுகாதாரப்பணியாளர்கள் விபரம்** | **பணியில் உள்ளவர்கள் எண்ணிக்கை** | **காலியிடம்** |
|---|---|---|---|
| 01 | துப்புரவு ஆய்வாளர் | 01 | 0 |
| 02 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 02 | 0 |
| 03 | துப்புரவு பணியாளர்கள் | 17 - நிரந்தரம்<br>99- Out Sourcing | 1 |
| 04 | ஓட்டுநர் | 4 | - |

பொது சுகாதார பிரிவில் துப்புரவு ஆய்வாளராக திரு. எஸ். ஆறுமுகம் அறிக்கையாண்டில் பணிபுரிந்து வந்தார். அவர் 29.02.2020 அன்று வயது முதிர்வு ஓய்வுபெற்றதால் 01.03.2020 லிருந்து துப்புரவு ஆய்வர் பணியிடம் காலியாக உள்ளது. துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் 16 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட பணியாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள்.

மேலும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொதுசுகாதார துப்புரவு பணி தனியார் மயமாக்கல் மூலமாக அம்மா சுய உதவிக்குழு ஒப்பந்த பணியின் கீழ் 99 துப்புரவு பணியாளர்கள் பணிபுரிகிறார்கள்.

**6) (அ) உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்:**

இந்நகராட்சியின் பராமரிப்பில் பள்ளிகள் ஏதும் இல்லை.

**நகராட்சிப்பகுதியில் உள்ள பள்ளிகள் விபரம்.**

1) **S.K.S.** அரசு மேல்நிலை பள்ளி, வேதாரண்யம்.
2) கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி
3) அரசினர் பெண்கள் மேநிலைப்பள்ளி
4) கஸ்தூர்பா காந்தி குருகுலம், தொடக்கப்பள்ளி
5) அரசு ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளி, வெட்டியக்காடு
6) ஊ.ஒ.தொ.பள்ளி (முஸ்லீம்) தோப்புத்துறை
7) அரசு உயர்நிலைப்பள்ளி, ஆறுகாட்டுத்துறை
8) ஊ.ஓ.தொ.பள்ளி, இராமகிருஷ்ணாபுரம்
9) அரசு உயர்நிலைப்பள்ளி, ஆறுகாட்டுத்துறை
10) உதவி தொடக்கப்பள்ளி, வடகட்டளை
11) ஊ.ஒ.தொ.பள்ளி (இந்து) தோப்புத்துறை
12) அரசு உயர்நிலைப்பள்ளி,தோப்புத்துறை
13) காந்தி உதவி துவக்கப்பள்ளி அகஸ்தியன்பள்ளி
14) ஊ.ஒ. நடுநிலைப்பள்ளி, மூன்றாம்தெரு
15) ஸ்ரீ தாயுமானவர் வித்யாலயம், வேதாரண்யம்
16) உதவி துவக்கப்பள்ளி, மணியன்தீவு
17) ஊ.ஒ.தொ. பள்ளி, ஆறுகாட்டுத்துறை
18) ஊ.ஒ.தொ. பள்ளி, வேம்பதேவன்காடு
19) ஊ.ஒ.தொ. பள்ளி, வடமழை ரஸ்தா
20) சுப்பையா உதவி தொடக்கப்பள்ளி, பயத்தவரன்காடு
21) அனந்தராசு நடுநிலைப்பள்ளி, மறைஞாயநல்லூர்
22) உ.ஒ.தொ. பள்ளி, கைலவனம்பேட்டை

**(ஆ) தனியார் பள்ளிகள்:**

1) தூய அந்தோணியர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, வேதாரண்யம்
2) காயிதே மில்லத் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, தோப்புத்துறை
3) சுவாமி விவேகானந்தா மழலையர் **&** துவக்கப்பள்ளி , வேதாரண்யம்
4) பாரதி வித்யாலயா, வேதாரண்யம்
5) சீனிவாசா மழலையர் **&** துவக்கப்பள்ளி , வேதாரண்யம்

**இ) கல்லூரிகள்**

1) பாரதிதாசன் மாதிரி கலைக்கல்லூரி
2) கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் ஆசிரியர் பயிற்சி கல்லூரி
3) இராமச்சந்திரா கல்வியியல் கல்லூரி மற்றும் தொழில் பயிற்சி கல்லூரி

## சந்தைகள் மற்றும்  திருவிழாக்கள்

இந்நகராட்சிப்பகுதியில் வாரச்சந்தை ஏதும் நடைபெறவில்லை.

அறிக்கை ஆண்டில் உள்ளூர் திருவிழாக்கள் தை மற்றும் ஆடி அமாவாசை தினங்களில் வழக்கம் போல் நடைபெற்று வருகிறது. கடலுக்கு புனித நீராட வரும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் பெண்கள் உடைமாற்றும் அறை, தற்காலிக நடமாடும் கழிப்பிடங்கள், குடிநீர் வசதி , பொது சுகாதார வசதிகள் நகராட்சியால் செய்து கொடுக்கப்பட்டது.

அருள்மிகு ஸ்ரீவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் மாசிமகப்பெருவிழா மற்றும் ஆடிப்பூர விழாக்கள் வழக்கம் போல் நடைபெற்று வருகிறது.

அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் தேர் திருவிழா 06.03.2020 – ம் தேதி அன்று நடைபெற்றது. நகராட்சி சார்பில் தேரோடும் வீதிகளில் இருந்த ஆக்ரமிப்புகள் மற்றும் மரங்கள் அகற்றப்பட்டது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். நகராட்சி சார்பில் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குடிநீர் வசதி, சுகாதார வசதி, கழிப்பிட வசதி போன்றவைகள் செய்து கொடுக்கப்பட்டது. தேர் திருவிழா மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் அவர்களால் வடம்பிடித்து துவக்கி வைக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

## கழிவு நீர் வடிகால்கள்:

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் ஏதுமில்லை.

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள திறந்தவெளி மழைநீர் வடிகால்கள் பராமரிப்பு செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளன.

## தெருவிளக்கு வசதி

அறிக்கை ஆண்டில் பராமரிக்கப்பட்டு வரும் விளக்குகளின் மொத்த எண்ணிக்கை

| | விபரம் | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 20W Led Fittings | : | 2208 |
| 2. | 40 W Led Fittings | : | 45 |
| 3. | 60 W Led Fittings | : | 22 |
| 4. | 90 W Led Fittings | : | 28 |
| 5. | 150 W Led Fittings | : | 12 |
| 7. | 200 W Led Fittings | : | 18 |
| | **Total** | | **2333** |

அறிக்கை ஆண்டில் தெருவிளக்கு பராமரிப்பு செலவு ரூ.**14.80** லட்சம் மற்றும் தெருவிளக்குகள் மின் கட்டணம் செலுத்திய வகையில் ரூ.**13.45** இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

## பொது நலம் மருத்துவ உதவி

இந்நகராட்சி எல்லைக்குள் இரண்டு தனியார் மருத்துவமனையும் ஒரு அரசு மருத்துவமனையும் உள்ளன.

## தனியார் மருத்துவ மனைகள் விபரம்:

1. பிரியா நர்சிங் ஹோம்
2. வேதை மருத்துவமனை

## மருத்துவமனைகள் விபரம்:

இந்நகராட்சியினால் மருத்துவமனைகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை. அறிக்கை ஆண்டில் சுகாதாரத்தைப் பற்றிய பிரசுரங்கள் சுகாதார சிப்பந்திகளை கொண்டு செய்யப்பட்டது.

## பிறப்பு விகிதமும், மகப்பேறு உதவியும்

## அறிக்கை ஆண்டில் பிறப்பு இறப்புகளை பதிவு செய்யும் பணி

அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் **17** ஆகும். நகராட்சி நிர்வாகத்தின் கீழ் மகப்பேறு இல்லங்கள் பராமரிக்கப்படவில்லை. குழந்தைகள் காப்பகம் ஊராட்சி ஒன்றியம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## இறப்பு விகிதம் தொற்று நோய்கள்

1. அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்புகள் : **236**

2. காலரா அம்மை போன்ற பல்வேறு நோய்கள் மூலம் இறப்புகள் ஏதும் இல்லை. மற்ற நோய்கள் மூலம் ஏற்பட்ட மரணம் குறித்த விளக்கம் கீழ்க்கண்டவாறு உள்ளன.

## சென்ற ஆண்டில் அறிக்கை:

| | | | |
|---|---|---|---|
| 1. | காலரா | : | இல்லை |
| 2. | அம்மை | : | இல்லை |
| 3. | பிளேக் | : | இல்லை |
| 4. | மலேரியா | : | இல்லை |
| 5. | சீதபேதி | : | இல்லை |
| 6. | காய்ச்சல் (டெங்கு) | : | இல்லை |
| 7. | பிற மூச்சுவை நோய்கள் | : | இல்லை |
| 8. | பிற காரணங்களால் | : | **236** |
| 9. | வெறிநாய் கடியினால் | : | இல்லை |
| 10. | சுனாமி பேரழிவால் | : | இல்லை |

## கொசுதடுப்பு ஒழிப்புத்திட்டம்:

வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் ஒழிப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் கீœ¡F¿¥Ã£lthW nk‰bfhŸs¥gL»wJ.

1 சுகாதாரப்பணியாளர்களை கொண்டு அனைத்துப்பகுதிகளில் உள்ள குப்பைகளை உடனுக்குடன் அகற்றப்படுகிறது.

2. நகராட்சிப்பகுதியில் சுகாதாரத்துறை ஆய்வாளர்கள் மற்றும் கிராம செவிலியர்கள் மூலம் வீடுவீடாக காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு விவரங்கள் சேகரிக்கப்படுகிறது.

3. 30 DBC பணியாளர்களைக்கொண்டு அனைத்து பகுதிகளிலும் வீடுவீடாக சென்று உபயோகமற்ற பொருட்களில் தண்ணீர் தேஙகுவதை கண்டறிதல் மற்றும் டெங்குகொசு புழு அழிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

4. அனைத்து நகராட்சிப்பகுதிகளிலும் கொசு புகை மருந்து இரண்டு சிறிய புகைத்தெளிப்பான் மற்றும் ஒரு பெரிய புகைத்தெளிப்பானை ஆட்டோவில் வைத்து தெளிக்கப்படுகிறது.

5. பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த டெங்கு காய்ச்சல் பற்றிய துண்டு பிரசுரங்கள் வினியோகிக்கப்படுகிறது.

6. அனைத்து மருத்துவமனைகளுக்கும் டெங்கு காய்ச்சல் அறிகுறியுள்ள நோயாளிகள் குறித்த விவரங்கள் தெரிவித்திட அறிவிப்புகள் அனுப்பப்பட்டு இவ்வலுவலக துப்புரவு ஆய்வர் மூலம் தினசரி மருத்துவமனைகளை தொடர்பு கொண்டு டெங்கு காய்ச்சல் அறிகுறியுள்ள நோயாளிகள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகிறது.

7. நீர்தேங்கி கொசு உற்பத்தியாகும் இடங்கள் கண்டறியப்பட்டு அபேட் கொசுமருந்து 2 கை தெளிப்பான்கள் மூலம் தெளிக்கப்படுவதோடு உரிய நிறுவனஙகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு தினசரி கண்காணிக்கப்படுகிறது.

Rfhjhu¤JiwÍl‹ efuh£Á ÏizªJ brašg£L jL¥ò elto¡iffŸ bjhl®ªJ nk‰bfhŸs¥g£L tU»wJ. இதன் மூலம் நோய்த்தொற்றுகள் பரவாமல் தடுக்கப்பட்டு வருகிறது.

## கொக்கிப்புழு பிளேக்

அறிக்கை ஆண்டில் இந்நோய் நகராட்சியில் இல்லை

## நோய் தடுப்புத் திட்டம்

குழந்தைகளுக்கு சொட்டு மருந்து ஒவ்வொரு புதன்கிழமையும் அரசு மருத்துவமனையில் வழங்கப்படுகிறது. வருடந்தோறும் பள்ளிகளுக்கான வாழ்வொளித்திட்டம் மூலம் மாணவ மாணவியர்களுக்கு அரசு மருத்துவமனை மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. நகராட்சியில் அரசினர் மருத்துமனை மூலம் யானைக்கால் நோய் ஒழிப்புத்திட்டம் செயல்பட்டு வருகிறது. நகரில் கொசு உற்பத்தியினை குறைக்க தினசரி கொசு மருந்து தெளிக்கப்பட்டு வருகின்றது.

## குடும்ப நலத்திட்டம்

குடும்ப நலத்திட்டத்திற்கென அலுவலர் எவரும் தனியாக நியமனம் செய்யப்படவில்லை. அரசு மருத்துவமனை மூலம் குடும்ப நலத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## பொது நலப்பணிகள்

நகராட்சியினால் பொதுசுகாதாரப் பணிகள் சிக்குன் குன்யா, டெஙகு காய்ச்சல் பன்றி காய்ச்சல் போன்ற நோய்கள் குறித்து விழிப்புணர்வுகள் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டு, நகராட்சியின் பொதுசுகாதார பணியாளர்களால் மழைநீர் மற்றும் கழிவுநீர்கள் தேஙகாவண்ணம் பராமரிக்கப்பட்டு நோய்கள் வராமல் தடுக்கப்பட்டு வருகிறது.

## இளம்பிள்ளை வாத நோய்:

தீவிர இளம்பிள்ளை வாத நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் இந்நகராட்சி பகுதிகளில் 16 மையங்கள் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாத நோய் தடுப்பு சொட்டு மருந்து 20.01.2020 அன்று 2436 குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழஙகப்பட்டது.

## பொது சுகாதாரம் துப்புரவு பாதுகாப்பு

அறிக்கை ஆண்டில் இரண்டு கட்டண கழிவறைகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. காலை மாலை இருவேளை தெருக்கள் கூட்டி சுத்தம் செய்யப்பட்டு குப்பைகள் நகராட்சி டிப்பர் லாரி மற்றும் டிராக்டர் மூலம் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் அம்மா சுயஉதவிக்குழு மூலமாக ஒப்பந்த அடிப்படையில் தனியார் துப்புரவு பணி மேற்கொள்ளப்படுகிறது. 10 வார்டுகளில் வீட்டுக்கு வீடு குப்பை அள்ளும் திட்டத்தில் குப்பைகள் அகற்றப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் கீழ்க்கண்டுள்ள இடங்களில் பொது கழிவறைகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | பேருந்துநிலையம் | பொது கட்டண கழிவறைகள் |
| 2 | ராஜாஜிபூங்கா | |
| 3 | அம்பேத்கார் காலனி | ஒருங்கிணைந்த சுகாதார வளாகம். |
| 4 | உச்சகட்டளை | |
| 5 | வண்ணாரத்தெரு | |
| 6 | அகஸ்தியன்பள்ளி | |

## தூய்மை இந்தியா திட்டம்.

2011-ம் வருடத்தில் எடுக்கப்பட்ட கழிவறை கட்டப்படாத குடியிருப்புகளின் கணக்கெடுப்பின்போது, திறந்த வெளியில் மலம் கழிக்கும் பகுதியில் இருந்த பட்டா நிலங்களில் அமையப்பெற்ற குடியிருப்புகளை மட்டுமே கணக்கெடுப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டது. 2011-ம் வருட கணக்கெடுப்பின்படி திறந்த வெளியில் மலம் கழிக்கும் பகுதியில் பட்டா உள்ள வீடுகளில் புதிதாக கழிவறை கட்டிட 836 வீடுகளும் மற்றும் ஏற்கனவே உள்ள கழிவறைகளை பழுது நீக்கம் செய்திட 63 வீடுகளும் தேர்வு செய்யப்பட்டிருந்தன.

ஆனால், தற்போது எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்போது நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து குடியிருப்புகளையும் ஆய்வு செய்ததில், 3047 குடியிருப்புகள் கழிவறை அமைக்கப்படாமல் உள்ளது கண்டறியப்பட்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கழிவறை கட்டுமானம் செய்திட போதுமான இடம் உள்ள கழிவறை இல்லாத அனைத்து வீடுகளையும் தேர்வு செய்யப்பட்டு கழிவறை கட்டிட இடம் உள்ள 2647 குடியிருப்புகளில்

கழிவறை அமைக்கப்பட ஒப்புதல் வழங்கப்பட்டது. 2017-18-ம் ஆண்டில் 2647 வீட்டு கழிப்பறைகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

வேதாரண்யம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தை பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாபெரும் விழிப்புணர்வு பேரணி இராஜாஜி பூங்காவில் தொடங்கி நகராட்சி அலுவலகம் வரை நடைபெற்றது. இதில் நகராட்சி ஆணையர், நகராட்சி அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள், நகராட்சி அனைத்த பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 1 மேற்பார்வையாளர் மற்றும் 6 பரப்புரையாளர்கள் பணிபுரிகின்றனர். அவர்கள் வீடு வீடாக குப்பை வழங்குவதையும், அதனை பிரித்து வழங்குவதை கணக்கெடுத்தல், மறு ஆய்வு, வீட்டு குப்பை குழிகளை ஆய்வு செய்தல், குப்பைகளை பிரித்து கொடுக்காதவர்களுக்கு அபராதம் இடுதல், குப்பை உருவாகும் இடத்திலேயே உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளுதல் (OCC), மொத்த குப்பைகளை உருவாக்குபவர்களுக்கு (BWG) அவர்களிடத்திலேயே உரம் தயாரிக்க அறிவுறுத்தியும் போன்ற செயல்பாடுகள் கண்காணிக்கின்றனர். தனிநபர் கழிப்பறை கட்டுதல் தொடர்பாக, கட்டுமான பணிகள் மறுஆய்வு மற்றும் தனிநபர் கழிப்பறை கட்ட இடம் இல்லாதவர்கள் HFA அனைவருக்கும் வீடுகட்டும் திட்டம் தொடர்பாக ஆய்வு செய்தல், நகராட்சிகளில் கிடைக்கப்பெறும் நெகிழிகள் (Plastic) மற்றும் மறு சுழற்சியில் பயன்படுத்தப்பட முடியாத (Dry Waste) கழிவுகளையும் சரியாக கணக்கிட்டு நிர்வகித்தல், மேலும், CT/PT சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொது கழிவறைகள் பயன்பாடு இல்லாமல் இருக்கும் கழிவறைகளை கணக்கெடுத்து, இடித்து அப்புறப்படுத்த தெரிவிக்கவும், கணக்கெடுப்பின்படி இடித்த அப்புறப்படுத்தப்பட்ட CT/PT இருந்த இடத்தில் வேறு என்ன அமைக்க உள்ளனர் என்று தெரிவித்தல் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை செய்து வருகின்றனர்.

“ மனித கழிவுகளை மனிதனே அகற்றும்” கழிவறைகள் ஏதும் இந்நகராட்சிப் பகுதியில் இல்லை.

## ஈ. கலவை உரம்

அரசாணை எண்.114 வருவாய்த்துறை நாள்.28.02.2011ல் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் உரக்கிடங்கு அமைத்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்திட உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு நிலங்களை நிலக்கிரயமின்றி வழங்கிட ஆணையிடப்பட்டதற்கிணங்க அரசு நிலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கடற்கரை சாலையில் 10 ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் நுண்ணிய உரக்கிடங்கு மையம் ரூ. 344 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் அவர்களால் அறிக்கையாண்டில் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## உணவு கலப்பட திட்டம்

அறிக்கையாண்டில் உணவு கலப்பட தடைச்சட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற துப்புரவு ஆய்வாளர் இல்லாமையால் உணவு மாதிரி எடுக்கப்படவில்லை. உணவு மாதிரிகள் எடுக்கப்படாததால் வழக்குகள் ஏதும் தொடரப்படவில்லை.

## தீயணைப்பு

இந்நகராட்சி பகுதியில் உள்ள ரெஸ்ட் ஹவுஸ் ரோட்டில் தீயணைப்பு நிலையம் செயல்பட்டு வருகின்றது

## சந்தைகள்

அறிக்கையாண்டில் சந்தைகள் ஏதும் நடைபெறவில்லை.

## பேருந்து நிலையம்

நகராட்சிக்கு சொந்தமான ‘ C ’ வகுப்பு பேரூந்து நிலையம் உள்ளது. தினசரி 75 பேருந்துகள் வந்து செல்கின்றன. பொது ஏலம் மூலமாக ஆண்டிற்கு ரூ.1,35,600/– வருமானம் பெறப்படுகிறது.

## வாகனங்கள் நிறுத்துமிடம்:

நகராட்சிக்கு சொந்தமான நிலங்கள் இல்லை என்பதால் வாகனங்கள் நிறுத்துமிடம் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை.

## வாடகை உந்து நிலையம்

வாடகை உந்து நிலையம் இந்நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை.

## சாலையோர மரங்கள்

சாலையோர மரங்கள் நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## மின்னனு ஆளுமை (E-GOVERNANCE)

வேதாரண்யம் நகராட்சியில் பிறப்பு, இறப்பு பதிவுகள் கணிணியில் பதிவு செய்யப்பட்டு உடனுக்குடன் பிறப்பு. இறப்பு சான்றிதழ்கள் கணிணி மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், சொத்துவரி, தொழில்வரி முதலியவை கணினியில் பதிவு செய்யப்பட்டு ரசீதுகள் கணினி மூலம் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சியின் அனைத்து வகை ரசீது இனங்களும் கணணியின் மூலமே வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சியின் அனைத்து பதிவேடுகளும் கணணியில் பதிவு செய்யும் பணி நடந்து வருகிறது. இந்நகராட்சி, மண்டல நிர்வாக இயக்குனர் அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் இம்மண்டலத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளுடனும் WAN Connectivity இணைக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சி கணினி உதவி திட்ட அமைப்பாளர் பணியிடம் தோற்றுவிக்கப்படாததால் இப்பணிகளை திருத்துறைப்பூண்டி நகராட்சியின் கணணி உதவி திட்ட அமைப்பாளர் திரு. தெ. சிற்றரசு கூடுதல் பொறுப்பாக பார்த்து வருகிறார். இந்நகராட்சியில் புள்ளி விவர குறிப்பாளராக 21.07.2014 முதல் திரு. வி.ஆர். ராஜேந்திரன் என்பவர் பணிபுரிந்தார். அவர் மன்னார்குடி நகராட்சிக்கு பணி மாறுதலில் சென்றதால் 27.08.2016 முதல் புள்ளி விபர குறிப்பாளர் பணியிடம் காலியாக உள்ளது.

நகராட்சி விபரங்கள் முழுவதும் Website மூலம் வெளியிடப்பட்டு நகராட்சி நடைமுறைகளை எல்லோரும் அறிந்து கொள்ள வெளிப்படையானதாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சியில் நடைபெறும் E-Tender விபரஙகள் Online மூலம் Website-ல் வெளியிடப்பட்டு Online மூலமாகவும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுகிறது.

மேலும், கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பங்கள் போன்றவை பதிவேற்றம் செய்யப்பட்டு Online மூலமாகவே அனுமதி வழங்கப்படுகிறது.

## 32. விரிவு மேம்பாட்டுத்திட்டம்

இத்தலைப்பின் கீழ் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை

## 33. நகரளவு

நகரளவர் பணியிடம் இல்லாமையால், இந்நகராட்சியில் தனியே நில அளவைப்பிரிவு இல்லை.

## வரை கடப்புகள்:

| | | |
|---|---|---|
| 1. | ஆண்டு துவக்கத்தில் இருந்த ஆக்கிரமிப்புகள் எண்ணிக்கை | இல்லை |
| 2. | அறிக்கையாண்டில் புதிதாக கண்டுபிடிக்கப் பட்டவை | இல்லை |
| 3. | அறிக்கை ஆண்டு முடிவில் இருந்தவை | இல்லை |
| 4. | அறிக்கை ஆண்டில் ஆக்கிரமிப்பு கட்டண வசூல் | இல்லை |

தற்காலிக ஆக்கிரமிப்புகள் அனைத்தும் நகராட்சியினால் உடனுக்குடன் அப்புறப்படுத்தப்படுகிறது.

## பொது வருவாய்

அ. சொத்து வரி 81(1) ன்படி சொத்து வரியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை சேர்ந்துள்ளன.

வருட வாடகை மதிப்பில் அரைவருட விகிதம்

(1998 – 99 இரண்டாம் அரையாண்டு முதல்)

1. பொது காரியங்களுக்கு – **6%**

2.தண்ணீர் வரி – **1 ½ %**

3.விளக்கு வரி – **1%**

4.வடிகால் – **½ %**

5.துப்பரவு வசதி வரி – **1%**

**2008-2009** ம் ஆண்டு முதல் புதிய சொத்துவரி அமுலுக்கு வந்துள்ளது. அதன்படி வரிவிதிப்பு செய்யப்பட்டு சொத்துவரி வசூல் செய்யப்பட்டு வருகின்றது.

## தொழில் வரி விதிப்பு விபரங்கள்: 2013-14 இரண்டாம் அரையாண்டு முதல் தொழில்வரி 25% வரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ.எ. | ஆறுமாத சராசரி வருமானம் | 01.10.2013 முதல் திருத்தியமைக்கப்பட்ட அரையாண்டு தொழில்வரி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ரூ.21000/- வரை | இல்லை |
| 2. | ரூ.21001/- முதல் ரூ.30000/- வரை | 125/- |
| 3. | ரூ.30001/- முதல் ரூ.45000/- வரை | 315/- |
| 4. | ரூ.45001/- முதல் ரூ.60000/- வரை | 625/- |
| 5. | ரூ.60001/- முதல் ரூ.75000/- வரை | 940/- |
| 6. | ரூ.75001/- மற்றும் அதற்கு மேல் | 1250/- |

## தொழில்வரி கேட்பு வசூல் நிலுவை விபரம் (2018-19)

| tpguk; | elg;g[ | epYit | bkhj;jk; |
|---|---|---|---|
| கேட்பு | **19.78** | **14.10** | **33.88** |
| வசூல் | **19.78** | **14.10** | **33.88** |
| நிலுவை | **0** | **0** | **0** |

## மார்க்கெட் (தினசரி)

இந்நகராட்சியில் காய்கறி மார்க்கெட் இல்லை.

இந்நகராட்சியில் மீன்மார்க்கெட் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் தேசிய மீன்வள அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மானயம் வரப்பெற்று மீன் மார்க்கெட் கட்டிடம் கட்டும் பணி 2017-18ம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. 2016-17ம் ஆண்டு வருமானம் ரூ.13750/-

ஆ) இந்நகராட்சியால் ஒரு பேரூந்து நிலையம் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஒரு நாளைக்கு சுமார் 70 பேருந்துகள், பேருந்து நிலையத்திற்கு வந்து போகின்றன. 2019-20 -ம் அறிக்கையாண்டில் ரூ.135600/- வருவாய் வரப்பெற்றது. சென்ற ஆண்டு வருமானம் ரூ.129150/-

## 5. நிதி நிலைமை

| | ரூபாயில் (இலட்சத்தில்) |
|---|---|
| ஆரம்ப கையிருப்பு | 83.27 |
| எல்லா இனங்களும் சேர்த்து வரவு | 858.24 |
| மொத்தம் | 941.51 |
| செலவு | 754.04 |
| முடிவான கையிருப்பு | 187.47 |

## மூலதன செலவு

அறிக்கையாண்டில் ஏற்பட்ட மூலதன வரவு ரூ.**768.00** லட்சம் செலவு ரூ.**539.00** லட்சம்

## கடன்கள்

கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்திற்கு HUDCO நிறுவனத்தில் கடன் நிலுவைத்தொகை ரூ.**90.89** உள்ளதில் நடப்பாண்டில் கடன் தொகை ரூ.**63.80** லட்சம் திருப்பி செலுத்தப்பட்டுள்ளது.

## தணிக்கை

| | | |
|---|---|---|
| அறிக்கையாண்டு தொடக்கத்தில் இருந்து தணிக்கைத்தடைகள் | – | **45** |
| அறிக்கையாண்டில் வரப்பெற்றது | – | **70** |
| மொத்தம் | – | **115** |
| அறிக்கையாண்டில் முடிவு பெற்றவை | – | **81** |
| அறிக்கையாண்டில் இறுதி நிலுவை | – | **34** |

தணிக்கைத்தடை நிலுவையில் உள்ளதை நிவர்த்தி செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நகராட்சியில் 2019-20-ம் ஆண்டு வரை வரவு செலவு தணிக்கை முடிவடைந்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

## பூங்காக்கள்

இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 2 பூங்காக்கள் மேம்பாடு செய்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சியினால் நான்கு இடங்களில் பூங்காக்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. 1. ராஜாஜிபூங்கா, 2. காந்திபூங்கா, 3.கலைஞர்பூங்கா, 4. அறிஞர் அண்ணாபூங்கா.

ராஜாஜிபூங்கா என்ற இடத்தில் பொதுகூட்டங்கள் நடத்திட ஏதுவாக அரங்குகள் அமைக்கப்பட்டு வாடகைக்கு விடப்படுகிறது. இதன்மூலம் ஆண்டிற்கு சராசரியாக ரூ.25000/- வருவாய் பெறப்படுகிறது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு ஏதும் பெறப்படவில்லை.

## நகர்ப்புற வளர்ச்சித்திட்டம்

நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

## பன்றிகள் ஒழிப்பு

அறிக்கையாண்டில் உரிமம் இன்றி அலைந்த திரிந்த பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்தப்பட்டது.

## நாய்கள் இனப்பெருக்கம் கட்டுப்படுத்துதல் (ABC Programme)

நகர் பகுதியில் கண்டறியப்பட்டுள்ள நாய்களின் எண்ணிக்கை 1232. நகராட்சியில் அறுவை சிகிச்சை செய்திட உரிய கட்டுமான வசதிகள் இல்லாமையால் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை கால்நடை மருந்தகத்தில் செய்யப்படுகிறது. 63 நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டுள்ளது.

## மாநில நிதிக்குழு மான்யம் (Devolution Fund)

இந்நகராட்சியில் 2019–20 ம் ஆண்டில் மாநில நிதிக்குழு மான்யமாக ரூ.568.38 இலட்சம் வரப்பெற்றுள்ளது.

## மான்யங்கள் (Grants)-2019-20

இந்நகராட்சியில் பல்வேறு திட்டங்கள் வாயிலாக அறிக்கையாண்டில் ரூ. 130.62 இலட்சம் மான்யம் வரப்பெற்றுள்ளது.

## கஜா புயல் (Natural calamities)

இந்நகராட்சியில் 2019–20 ம் ஆண்டில் அரசின் மான்யமாக ரூ.100.00 இலட்சம் வரப்பெற்றுள்ளது. சென்ற 2018-2019 ம் அறிக்கை ஆண்டில் 15.11.2018 அன்று தொடங்கி கரையை கடந்த கஜா புயலினால் வேதாரண்யம் நகராட்சி கடுமையான பாதிப்புக்குள்ளானது. வீடுகள்,சாலைகள், தெருவிளக்குகள்,குடிநீர் விநியோகம் மற்றும் கட்டிடங்கள் சேதமடைந்தன. சுமார் 1840 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் முற்றிலும் சேதமடைந்து.மரங்கள் விழுந்து பொதுமக்களுக்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

## தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஈமச்சடங்கு மானியம்

இத்தலைப்பின் அறிக்கையாண்டில் 12 பயனாளிகளுக்கு ரூ.30000/- பொது நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

## டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் அனைத்தும் மாவட்ட சமூக நலத்துறை மூலமாக வழங்கப்படுகிறது.

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம்

இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் அனைத்தும் மாவட்ட சமூக நலத்துறை மூலமாக வழங்கப்படுகிறது.

## மாநில கணக்காயர் தணிக்கைத்தடைகள் (A.G. Audit Para)

| | எண்ணிக்கை |
|---|---|
| 2013–14 | 8 |
| கூடுதல் | 8 |

நிலுவைப் பத்திகளுக்கு உரிய பதில்கள் தயார் செய்யப்பட்டு மாநில கணக்காயர் சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## வேதாரண்யம் நகராட்சியின் சுற்றுப்புற சூழ்நிலை குறிப்பு

வேதாரண்யம் நகராட்சி எல்லையில் 2 மர அறுவை மில்லும் 13 அரிசி மாவு மில்லும் உள்ளது. மேலும், 298 மளிகை கடைகளும், 17 ஜவுளிக்கடைகளும், 5 உணவு விடுதிகளும், 5 தங்கும் விடுதிகளும் உள்ளன. 2 திரைப்பட அரங்குகள் உள்ளது. 6 திருமண மண்டபங்கள் உள்ளன. வேதாரண்யம் நகராட்சி எல்லையில் தொழிற்சாலைகள் ஏதும் இல்லை. வேதாரண்யம் நகராட்சியின் பெரும் பகுதி குடிசைப் பகுதியாகும். வேதாரண்யம் நகராட்சியை சுற்றியுள்ள இடங்களும் கிராமங்களாகும். இந்த ஊரின் முக்கிய தொழில் விவசாயமும், உப்பு உற்பத்தியும் ஆகும்.

## <u>கொரோனா வைரஸ் (Covid -19)</u>

அறிக்கையாண்டின் இறுதியில் கொரோனா வைரஸ் நோய் உலகளாவிய பொது சுகாதார அவசர நிலையாக அறிவிக்கப்பட்ட நிலையில், உலக சுகாதார நிறுவனம் இதனை தற்போது உலகளாவிய நோய்த் தொற்றாக (Pandemic) அறிவிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுத்திடவும், பொதுமக்கள் பாதிக்கப்படாமல் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், திரையரங்குகள், பள்ளி, கல்லூரிகள், திருமண மண்டபங்கள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் மற்றும் வணிக வளாகங்களில் உரிய நோய் ஒழிப்பு கிருமிகள் தெளித்திடவும், இருக்கைகள், கைப்பிடிகள், மேசை மற்றும் மின்தூக்கிகள்(Lifts) அனைத்தும் லைசால், சோடியம் ஹைட்ரோ குளோரைடு தண்ணீரில் கலந்து சுத்தம் செய்திடவும், சளி, இருமல், காய்ச்சல் உள்ளவர்கள் கண்டறியப்பட்டால் அரசு மருத்துவமனைகளை அணுகிட அறிவுறுத்தவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அரசால் **24.03.2020** முதல் **14.04.2020** முடிய முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. நாடு முழுவதும் முழு ஊரடஙகு பிறப்பிக்கப்பட்ட நிலையில் மாநில அரசின் உத்தரவுப்படி அம்மா உணவகத்தின் மூலம் உணவுகள் சமைத்து நகர்ப்பகுதி முழுவதும் உள்ள ஆதரவற்றோர், வெளி மாநில தொழிலாளர் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நகராட்சி பணியாளர்கள் மூலம் மூன்று வேளையும் இலவசமாக உணவுகள் வழஙகப்பட்டது. நகராட்சியில் **24** மணி நேர கட்டுப்பாட்டு அறை உருவாக்கப்பட்டு பொதுமக்களுக்கு உடனடியாக சேவை வழஙகப்பட்டது.

பொதுமக்கள் வெளியில் நடமாடுவதை தவிர்க்கும் பொருட்டு வீட்டிலேயே இருப்பதால் பொதுசுகாதார கேடு ஏற்படாவண்ணம் நகராட்சி தூய்மை பணியாளர்களைக்கொண்டு நகர்பகுதி முழுவதும் போர்கால அடிப்படையில் தினசரி சுகாதாரப்பணி மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்கள் கூடும் அனைத்து வணிக நிறுவனஙகள், வஙகிகள் மற்றும் ஏடிஎம் மையஙகளில் சமூக இடைவெளியை கடைப்பிடிக்கும் வண்ணம் **3** மீட்டர் இடைவெளியில் குறியீடுகள் அமைக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது.

நகராட்சி தூய்மைப்பணியாளர்களின் பணியினை ஊக்குவிக்கும் வகையில் தூய்மை பணியாளர்களுக்கு அதிகாலை டீ மற்றும் பன், காலை சிற்றுண்டி, மதியம் முட்டையுடன் கூடிய சாப்பாடு அம்மா உணவகத்தில் தயார் செய்து தொடர்ந்து வழஙகப்பட்டது. ஏழைமக்கள் பயன்படும் வகையில் தமிழக அரசால் தொடஙகப்பட்ட அம்மா உணவகம் மூலம் உணவு வழங்கப்பட்டது.

## பொதுக் குறிப்புகள்

நகராட்சி நிர்வாகத்திற்கும் ஆணையர் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் இடையே சுமுகமான உறவு நிலை அறிக்கையாண்டில் நிலவி வந்துள்ளது.

தமிழ்ஆட்சி மொழித்திட்டம் அறிக்கை ஆண்டில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளது. நிர்வாக அறிக்கையின் இணைப்புகளும் முழுமையாக தமிழிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. பொதுவாக தனி அலுவலர் மற்றும் அனைத்து நகராட்சிப்பணியாளர்கள் நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்திட முழுமையான ஒத்துழைப்பை கொடுத்துள்ளார்கள்.

இடம் : வேதாரண்யம் ஆணையர்(பொ),<br>
நாள் : **08.07.2020** வேதாரண்யம் நகராட்சி.